ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

अनृतं साहसं माया मूर्खत्वमतिलोभता ।
अशौचं निर्दयत्वं च स्त्रीणां दोषास्स्वभावजाः ॥

பொய் பேசுகிறது, பிறர் சொல்வது உசிதமாயிருந்தாலும் அதை அங்கீகரிக்காமல் தன்னிஷ்டத்தையே பூர்த்திசெய்யவேண்டுமென்று பிடிவாதம் செய்வது, ஆர்ஜவமன்றி கபடமாய் நடப்பது, தன்க்குத்தோன்றியவாறு கெட்ட வழிகளிலே செல்வது, பிறர்பொருளை சாஸ்திர விரோதமாய்த் தானடையவேண்டுமென்று எப்பொழுதும் ஆசைப்படுவது, மனம். வாக்கு, காயம் என இம்மூன்றிலும் சுத்தி, கருணை இவையில்லாதிருப்பது, என்கிற இந்த தோஷங்கள் ஸ்திரீகளுக்கு இயற்கையாய் ஜன்மாவுடன் கூடவே ஏற்பட்டிருக்கின்றன.

ஸ்திரீகளுக்கு ஜன்ம காலத்திலேயே, கூடவே பலதோஷங்களும் உண்டாயிருக்கிறபடியால் அவர்களுடைய பழக்கத்தை நமக்கு விலக்க முடியாவிடினும் மிகவும் ஜாக்கிரதையாயிருந்தாற்றான் நாம் அதிக கஷ்டங்களை யனுபவியாமலிருக்கலாம். இல்லாவிடில் பல துன்பங்களை நமக்கு விளைவிப்பார்கள். இக்கருத்தையே:—

स्त्रियोहि मूलं कलहस्य पुंसः स्त्रियोहि मूलं व्यसनस्य पुंसः ।
स्त्रियोहि मूलं नरकस्य पुंसस्तज्जागरूकाभवतास्तु नित्यम् ॥

குடும்பங்களிலேற்படும் கலகங்களுக்கு ஸ்திரீகளே காரணமாகின்றார்கள். புமான்களுடைய மனதிற் குண்டாகும் கஷ்டங்களுக்கும் இவர்களே காரணம். மற்றும் பல பாபங்களுக்கும் உள்ளாக்கி பரலோகத்திலும் கொடிய நரகங்களுக்கு இரையாகச் செய்பவர்களும் இவர்களே ஆகையால் ஹே! புருஷர்களே! இவ்விதத் துன்பங்களுக்காளாகாமல் ஸ்திரீகளிடத்தில் எப்பொழுதும் ஜாக்கிரதை யாயிருக்கவேண்டுமென்று ஓரறிஞர் கூறுகின்றார்.

சுபம்

ஆவின் பயன்

இது காறும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள சில வற்றை எடுத்துக்காட்டப்பட்டது. இனி நம்பழக்கத்தில் அறிந்தவை களையு மெடுத்துரைப்பாம். நற்சுவை பொருந்தியதும், தோஷ மற்றதும், சரீரத்திற்கு ஹிதத்தைச் செய்யுந்தன்மைவாய்ந்தது மானகோவின்பாலானது மாந்தர்களுக்குச்சிறந்தஉணவாகிறது. அன்றியும், அன்னம் முதலிய ஆஹாரங்கள் கோக்ஷீரத்தைப் போலல்லாது, புசிப்பவர்களின் சரீரத்தின் கூறுக்குத்தக்கவாறு பலநோய்களுக்கு இடமாகின்றனவென்பது வெளிப்படை. கோக்ஷீரமோ வியாதிக்கு இடங்கொடாமலிருப்பது மாத்திரமல்லாமல் வேறுதோஷங்களால் சரீரத்திலேற்படும் நோய்களைப்போக்கக்கூடியதென்றுன்னியே, எவ்வித ஔஷதங்களை ஸேவித்தாலும் அக்காலங்களில் இதரஆஹாரங்களை விலக்கி,பசுவின் பாலையே உட்கொள்ள வேண்டுமென்கிற கொள்கையை அநுசரித்து பலவைத்திய சாஸ்திரநிபுணர்கள் அநுஷ்டானத்திலும் அவ்விதமே செய்து வருகின்றனர். உபவாஸமாயிருந்து நடத்தவேண்டிய வைதிக கர்மாக்களை அவ்வண்ணம் நடத்த சத்தியற்ற பாலர், முதிர்வயதுடையோர் முதலியவர்கள் கோக்ஷீரத்தையருந்திய பிறகு அநுஷ்டித்தாலும் உபவாஸத்திற்குக்குறையில்லையெனச்சான்றோர் கொள்கையை முன்னமேயே நிரூபித்திருக்கிறோம். மற்றும் இதைவேறு பதார்த்தங்களில்சேர்த்து செய்யப்படும் ருசிகரமான தின்பண்டங்கள் பலவுள. பலவியாதிகளுக்கு இதையும் சிறந்த ஔஷதமாக அங்கீ கரிக்கிறார்கள்.

பால்யத்தில் தாயிழந்த பாலர்களை வளர்ப்பதற்கு இது போல் இன்றி யமையாத ஸாதனமாக வேறொன்று மாகமாட்டா. நம் முன்னோர்கள் தாயிழந்த சிசுவைப்பாதுகாப்பதற்கு வேறொன் றையும் எதிர் பாராமல் சுத்தமான ஆவின்பாலையே உபயோகி த்தார்கள். அதனால் அச்சிசுக்கள் நோயற்றுச் சுகமாகஉறுதி யான சரீரத்துடன் உலகில் உலாவலுற்றன. தற்காலத்திலோ இச்சிசுக்களைப்பாது காத்தலை என்னென்றுரைப்பது. தற்கா லத்திய புதிய நாகரீகத்தை கைக்கொண்ட நம்மவர்கள் குழந் தைகளை வளர்ப்பதற்கு தொன்று தொட்டுப் பெரியோர்களால் கையாடி அனுபவித்து வரப்பெற்ற சிறந்தரஸாயனம் போன்ற கோக்ஷீரத்தை விலக்கி அன்னிய தேசங்களிலிருந்து வரும் பள பள வென்று தங்கமுலாம் பூசப்பெற்றதும், மிகவும் அழகான கார்க்குடனுள்ளதுமான சீஸா சம்புடம் முதலிய மருந்துவைக் கும் பாத்திரங்களைக்கண்டு மதி மயங்கி, உள்ளிருக்கும் சாமா னுடைய குணங்களைச் சிறிது மறியாமலேயே, அதைச்சிறந்த தெனக்கருதி பொருட் செலவையும் செய்து பால் பெட்டிமுத லான ஆஹாரங்களை வாங்கிக்கொடுக்கிறார்கள். இந்த ஆகாரத் தை உபயோகப்படுத்துவதற்கு முன் நன்கு ஜீவிக்கு மென்று பார்ப்போர்கருதிய குழந்தை இந்த ஆஹாரத்தை உபயோகிக் கப்பெற்ற ஒருமாதத்தில் இளைத்து ஆறுமாதத்திய கட்டி வயி ற்றிலிருக்கிறதென்று வைத்தியர்கள் கூறும்படியான நிலைமைக் குவந்து விடுகிறது. இம்மாதிரியான ஆஹாரதோஷத்தால் தற் காலத்தில் சிசு மரணம் அதிகரிக்கின்றது. ஆகையால் நம்தே சத்திலுள்ள சுத்தமான பசுவின் பாலை உபயோகப்படுத்தினால் பொருள் நஷ்டமும் அதிகமில்லை. இவ்விதம் அதிகமான சிசு மரணமும் நேராது. இதனால் தாயைப்போல குழந்தைகளை வளர்ப்பதற்கு ஆவின்பால்மிகவும் சிறந்ததென்று தெரிகிறது.

பின்னும் பசுவின் நீர் சிலவியாதிகளுக்குச் சிறந்தஔஷதமா கும்.இதைச் செவ்வையாய் ஏழு அல்லது எட்டு முறை வடிக் கட்டிச் சாப்பிட்டால் மலச்சிக்கல், வாதத்தாலுண்டாகும் கை

கால் வீக்கம் முதலிய வியாதிகள் தீரும். கோமயமும் அநேக விதத்திலுபயோகப்படுகிறது. அதன் ஸ்வரூபத்தைக் கவனித்தால் கோவின் மலமென்று சொல்வார்கள். அப்படி இருப்பினும் அதை சுத்தமான இடத்திலிருந்து எடுத்து விதிப்படி விபூதியாகச் செய்தால் பல மதஸ்தர்களுக்கும் அலங்காரமாய்நெற்றியிலும் மற்று முள்ள அவையங்களிலும் தரித்துக்கொள்ள உபயோகப்படு கின்றது. (தொடரும்)

நிரிந்திரியர்களுக்கு தாயபாகம் வேண்டுமாம்

பதிதர்களான மதப்ரஷ்டர்களுக்கும் ஜாதிப்ரஷ்டர்களுக்கும் ரிக்தபாகம் தாயபாகம் உண்டென்று 73 வருஷங்களுக்கு முன்னமேயே ஸ்மிருதி விருத்தமாகவும், ஜனங்கள் சம்மதம் பெறுமலும், சட்டமாக்கப்பட்டிருக்கிறது என்று ஆர்யதர்மம், 7 வது புத்தகம், 46 வது ஸஞ்சிகையில் கூறினோம். இப்போது அங்கஹீனம் புத்திஹீனம் முதலான அசக்தர்கள் யாவருக்கும் அக்குறைவுகள் நேராதது போலவே பாகம் கொடுப்பதே தர்மமாகும்என்றும், அப்படிச்செய்வது அவசியமென்றும், அது பொது ஜன அபிப்ராயத்தைத் தழுவியிருக்கிற தென்றும், சென்னை ஹைகோர்ட்டில் வக்கீலாயும், பிறகு ஜட்ஜாயுமிருந்த ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி அய்யர், இந்தியா சட்டசபையில் நிரிந்திரியர்களுக்கு தாயபாகம் இல்லை யென்றிருக்கும் அதர்மத்தை நிவர்த்திசெய்ய, ஒரு மசோதாபிரேரேபித்து, அதுவும் சர்க்கார் அநுமதி பெற்று, சட்டசபையாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மசோதா மிகவும் சுருக்கம். அது பின் வருமாறு:—

"ஹிந்து தர்ம சாஸ்திர விதிக்கும், நீண்டவழக்கத்துக்கும் என்ன விரோதமாயிருந்தாலும், ஹிந்து தர்ம சாஸ்திரத்துக்கு

ட்பட்ட எவனும், பாகயோக்யமான சொத்தில், தனக்கிருக்கும் எந்த வியாதி, அங்கஹீனம், சாரீரக மானஸீக சக்திக் குறைவுகளினால் மாத்திரம், தன்விதம் பெறாமல் விலக்கப்பட மாட்டான்."

"இது வங்காளத்தைத் தவிர, மற்ற இந்திய மாகாணங்கள் எல்லாவற்றிற்கும் ப்ரயோகமாகும்."

இந்த மசோதாவின் நோக்கங்களும் ஹேதுக்களும் பின்வருமாறு:—"தங்களுக்கு இப்போதிருக்கும் துர்த்தசையானது சென்ற பிறப்புக்களில் செய்த வினைப்பயனாகிய பாபத்தால் நேர்ந்திருக்கிறதாலும், அக்காரணத்தால் அவர்கள்பிதிரார்ஜித சொத்தில் பங்குபெற அர்கர்கள் அல்லவென்றும் சாஸ்திர அபிப்பிராயங் கொண்டு சில வகுப்பார்களுக்கு தாயபாகம் இல்லை என்று விலக்கப்பட்டிருக்கிறது. இந்த விதியின் காரணம் சரியா அல்லவா என்ற விஷயத்தைப் பராமர்சிக்காமலே, நாம் இருக்கும் காலத்தை நோக்கின் மேலே கூறிய தாயபாக விலக்கு ஹேதுக்கள் ஒருவனுக்குக் காலக்ஷேபார்த்தமான லௌகீக பாத்தியதையை இழக்கச் செய்யவிடக்கூடாது என்பது என் அபிப்ராயம். அங்கம் சரியாய்ப்பெற்ற சகோதரர்கள் ஜீவனோபாயம் தாங்களே தேடிக்கொள்ளலாம்; அவ்விதம் செய்ய இயலாத அங்கஹீனர்களுக்கன்றோ விசேஷமான உதவிவேண்டும். தற்காலம் ஹிந்துதர்ம சாஸ்திரம் அவர்களுக்கு விதித்திருக்கும் கஷ்டத்தை நிவர்த்திப்பது நியாயமென்று பொது ஜன அபிப்ராயமும் பலமாய் வெளிவந்திருக்கிறது."

"சட்ட நிர்மாணஸபையில் ஹிந்துதர்ம சாஸ்திரத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நான் பிரேரேபித்தபொழுது வங்காள பிரதிநிதிகள் சிலர் அதற்கு ஆக்ஷேபித்துதான் வங்காளத்தை இந்தசட்டத்தின் பிரயோகத்தினின்று நான் விலக்கியதற்குக் காரணம். அப்போது எதிர்த்துப் பேசினவர்கள் தங்கள் சொந்த அபிப்ராயத்தை வெளியிட்டனர் போலும். மாகாணத்தின் ஜனசமூக அபிப்பிராயம் அப்படியே என்று

கொள்ளுவதற்கு இடமில்லைபோலும். அங்ஙனமாயின், வங்காள விலக்கு வசனங்களை, சோதனைக்கமிட்டியில் மாற்றலாகும். அதல்லாமல், இப்போது தெரியவந்தபடி, வங்காளிகள் தர்ம சாஸ்திர ஒழுங்கை திடமாய்க் கைப்பற்றியவர்களென்று தீர்மானமாய் நிற்கும் பக்ஷத்தில், இந்த சட்டத்தை அவர்களுக்குப் பிரயோகப் படுத்தப் பார்ப்பது மற்றப் பிராந்தியங்களுக்காவது சட்டமாவதைத் தடுக்கக்கூடும். இதுதான் நான் வங்காளத்தை விலக்கியதற்குக் காரணம்."

ஸ்ரீமான் சேஷகிரி அய்யர் அவர்கள் கூறியிருக்கும் ஹேதுக்களையும் நோக்கங்களையும் ஆராயுங்கால் நிரிந்திரியர்களின் பாகவிலக்கு

1. சாஸ்திரத்தின் உண்மையான அபிப்பிராயம் அல்லவென்றும்,
2. அப்படியிருந்தாலும், அது தற்காலத்துக்கு ஏற்றதில்லையென்றும்,
3. நிரம்பிய அவயவ சக்தி பெற்றவர்களைக் காட்டிலும், அவை பெறாத சகோதரர்களே பாகம்பெறுவது நியாயமென்றும்,
4. பொதுஜன அபிப்பிராயமும் அவ்விதமேயிருக்கிறதென்றும், சொல்லுகிறார்கள்.

மேலே சொன்ன காரணங்கள் தவிர, அவர்சபையில் பேசின பேச்சின் ஸாரங்களாலும், பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்ட அபிப்பிராயங்களாலும், இன்னும் சில காரணங்களையும் கூறியிருக்கிறார். அதாவது,

5. ஹிந்து மதத்திற்கும் அவர்கள் ஆசாரம் சம்பிரதாயங்களுக்கும் வைதீக சம்பந்தமில்லையென்றும்,
6. காலத்திற் கேற்ப ஆசார சம்பிரதாயங்களை மாற்றவேண்டுமென்றும்,
7. அவ்விதம் மாற்றி வந்தபடியால் தான் அநேக ஸ்மிருதிகள் உண்டாயிருக்கின்றனவென்றும்,

8. அப்படி தற்போது மாற்றுவிடில், நமது நாகரீகம் பரிகஹ ஸிக்கப்படுவதோடு, மேல்நாட்டாரைப் போல் நாம் கௌர வத்தையும், பலத்தையும் அடைய முடியா தென்றும்,

9. ஏற்கனவே ஆங்கிலேய அரசாங்கத்தார் நமது தர்மசாஸ் திர விதிகளிற் சிலவற்றைக் கண்டித்தும் மாற்றியுமிருக்கி றதாலும்,

10. 73 வருஷங்களுக்கு முன் மதப்ரஷ்டர்களுக்கும் ஜாதிப்ர ஷ்டர்களுக்கும் ரிக்ததாயபாகம் உண்டென்று சட்டம் செய்யப்பட்டு நிலைத்திருக்க, அதைமாற்றுது நிரிந்திரியர் களுக்கு மாத்திரம் பாகமில்லையென்று சொல்வது எவ் விதம் சரியான காரணமாகுமென்றும்

வாதுசெய்கிறார். ஆகையால் அவர் சொல்லும் கக்ஷிகளைப்பரி சீலனம் செய்யவேண்டியது அவசியம்.

இது விஷயத்தில் சாஸ்திரத்தின் நிஜ அபிப்பிராயம் எப் படி இருக்கிறதென்று முதலில் விசாரிப்போம்.

த்விஜனாய்ப் பிறந்தவன் எவனுக்கும் பிறப்பால் மூன்று கடன்கள் உண்டு. தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் மூவருக்கும் யக்ஞத்தினாலும், வேதாத்யயனத்தாலும், புத்ரனை உண்டு பண்ணுதலாலும் முறையே கடன்களைத் தீர்க்கிறான். இவை யன்றி தன்னுடன் உலகத்தில் இயங்கும் ஏனைய மனிதர் களுக்கும், ஜீவராசிகளுக்கும் உதவி செய்யவும் கடமைப்பட் டவன். அதனால் தான் த்விஜர்கள் பஞ்சயக்ஞம் செய்ய வேண்டியது அவசியம். பித்ருக்களை சிராத்தம் செய்வதால் திருப்தி செய்யவேண்டும் என்பது விதி.

अध्यापनं ब्रह्मयज्ञः पितृयज्ञस्तु तर्पणम् ।

அக்னியிற் செய்த ஆகுதிரஸம் ஆதித்யனை அடைகிறது. ஆதித்யனால் மழை உண்டாகிறது, மழையினால் அன்னம் உண் டாகிறது, அன்னத்தினால் ப்ரஜைகள் உண்டாகிறார்கள்.

अग्नौ प्रास्ताहुतिः सम्यगादित्यमुपतिष्ठते ।
आदित्याज्जायते वृष्टिर्वृष्टेरन्नं ततः प्रजाः ॥

என்றும், யக்ஞத்தால் தான் லோகம் விளங்குகிறதினால் யக்ஞம் அவசியம் செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

ஆகையால் கடவுள் நமக்குக் கொடுத்த பொருள்கள் யாவும் யக்ஞம் செய்வதற்காகவே. செய்யுங்கர்த்தாவுக்கும், அதற்குத் துணையாயிருப்போருக்கும் காலக்ஷேபார்த்தம் மாத்திரம் அதில் ஒரு பாகம் ப்ரயோஜனப் படுத்தலாம். போகார்த்தம் அவை ஏற்பட்டவையல்ல என்பது சாஸ்திர தர்மம்.

ஒரு த்விஜன் தன் ஜீவதசையில் தன் பொருளை யக்ஞத்தில் செலவழித்தும், தன் முன்னோர்களுக்கும் விசேஷமாய் சிராத்தாதிகள் செய்யும் பொருட்டும், தன்னை 'புத்' என்னும் நரகத்திலிருந்து மீட்கும் பொருட்டும் தான் கொடுக்க வேண்டிய வைதீக லௌகிகக் கடன்களைத் தீர்க்கும் பொருட்டும், புத்திரனை யுண்டுபண்ண வேண்டியது அவசியம். அபுத்ரவானுக்கு மோக்ஷமில்லை யென்று சாஸ்திரம் முறையிடுகிறது. காமத்தின் பொருட்டு விவாஹம் ஏற்பட்டதில்லை.

புத்திரன் தன் ஸர்வரிணங்களையும் தீர்ப்பதால், தன்னுடைய யக்ஞார்த்தமான சொத்துக்களையும் புத்திரனே யடையவேண்டியது நியாயமாயிருக்கிறது.

पितृणामनृणश्चैव स तस्मात्सर्वमर्हति ॥

பிதாமாதாக்கள் ஜீவதசைக்குப் பிறகு பிள்ளைகள் சொத்தை யடைய வேண்டியது முறை. அதை ஸமமாகவே பங்கிட்டுக் கொள்ள வேண்டியதென்பதும் ஆபஸ்தம்பருடைய மதம். ஸ்ஜாதீயமான ஔரஸபுத்ரனே யுக்ஞகார்யத்துக்கு அர்ஹன். அவனே ரிக்த தாய பாகங்களுக்கு உடையவனுவான். தத்தனையும் ஔரஸனுக பாவிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் மற்ற க்ஷேத்ரஜன் முதலான பலவித புத்ரர்களை இந்த யுகத்தில் ஏன்

புத்ரனாக பாவிப்பதில்லை என்றால், அவைகளுக்கு மூலமான பழைய விவாஹ வேறுபாடுகள் வழக்கத்தினின்றும் நீக்கப் பட்டுப்போயின.

பிதாவுக்குச் சம்மதமிருந்தால், தன் ஜீவதசையிலேயே பிரித்துக் கொடுத்துவிடலாம். இக்காலத்தில் பிதாவுக்கு சம்மதமில்லாமல் போனாலும், புத்ரன் தன் பங்குக்கு தான் பிறந்த காரணத்தினாலேயே பாத்யங் கொண்டாடி, பிரித்துக் கொள்ளலாமென்றும் கோர்ட்டுத் தீர்மானங்கள் இயங்கு கின்றன.

பாகம் செய்து கொள்ளுவது எதற்காக? பிதாமாதாக்கள் ப்ராதாக்கள், பந்துக்கள், தொந்தரவில்லாமல் ஏகதேசத்தில் ஸ்திரீ புருஷர்கள் சௌக்கியமாய் போகத்தை அனுபவிக்கும் பொருட்டல்ல. மற்ற மிலேச்ச ஜாதிகளைப் பார்த்து நம்மில் சிலர், சொத்தும், அதைப் பங்கு பிரித்துக் கொள்வதும், ஸ்வா தந்திரிய போகத்துக் கென்று நினைக்கிறார்கள். அதனால் தான் அவர்கள் தனக்கும் தன்னைச்சேர்ந்தவர்களுக்கும் ப்ரீ தியால் பங்கு பாத்யம் வேண்டுமென்று கூக்குரலிடுகிறார்கள். ஒருவனுக்குத் தான் தேடும் சொத்தை நல்லமார்க்கத்திலோ அதை விட்டு கெட்டமார்க்கத்திலோ செலவிட அதிகாரம் இருக்கக்கூடும். அப்போதும் தான் ரக்ஷிக்கக் கடமைப் பட்டவர்களை ரக்ஷித்தே தீரவேண்டியது தர்மமாயும், சாமா னிய மனிதக் கொள்கையாயும், சட்டமாயுமிருக்கிறது. தங்கள் பிதா, பாட்டன் தேடிய சொத்துக்களில், அவர்களுக்கும் தேவர்களுக்கும் யக்ஞம் சிராத்தம் முதலான கடன்களைக் கொடுக்க சக்தியற்றவர்களும், கொடுக்கமறுப்பவர்களும் தங்களுக்கு பங்கு கிடைக்க வேண்டியது நியாயம் என்று சொல்லப்போமா?

एवं सह वसेयुर्वा पृथग्वा धर्मकाम्यया ।
पृथग्विवर्धते धर्मस्तस्माद्धर्म्या पृथक्क्रिया ॥ மனு IX 111

சகோதரர்கள் சேர்ந்து ஒரே குடும்பமாய் இருக்கக்கடவார்கள் தர்மத்தைச் செய்ய வேணு மென்று ஆசையிருந்தால்தனியாயு மிருக்கலாம், ஏனெனின் தனித்தனியாய்ச் செய்வதினாலேயே தர்மம் பெருகுகிறது. ஆகையால் பாகம்செய்து கொள்ளுவது தர்மமேயாம்,என்று சாஸ்திரம் கூறியிருப்பதால், யக்ஞம் தனித் தனியாய்ச் செய்யும் பொருட்டே பாகம் செய்து கொள்ளுவ தின் காரணமென்று என விளங்குகிறது.

ஆகையால், யக்ஞம் செய்யவும் பிதாவின் கடனைத்தீர்க்க யோக்யதையில்லாத பெண் குழந்தைகளும், யக்ஞம் செய்ய யோக்யதை யில்லாத நிரிந்திரியர்களும், பதிதர்களும் தாய பாகத்துக்கு அர்ஹர்கள் அல்லது என்பது சாஸ்திரத்தில் கிடைக்கிறது.

यज्ञार्थे द्रव्यमुत्पन्नं तत्रानधिकृताश्च ये ।
अरिक्थभाजस्ते सर्वे ग्रासाच्छादनभाजनाः ॥
यज्ञार्थं विहितं वित्तं तस्मात्तद्विनियोजयेत् ।
स्थानेषु धर्मजुष्टेषु न स्त्रीमूर्खविधर्मिषु ॥

யாக்ஞவல்க்யம் VIII. 136 வியாக்யானம்.

என்ற ஸ்மிருதி வசனத்தால், சொத்து யக்ஞத்தின் பொருட்டென்றும், அதில் அதிகாரமில்லாதார்க்கு பங்கில்லையென்றும், அவர்கள் அன்னமும்வஸ்திரமும்பெறக்கடவர்களென்றும், யக்ஞத்துக்கு யோக்யமான பொருளை அதற்கே உபயோகப்படுத்தவேண்டும் என்றும், தர்மவிருத்தமான காரியங்களிலாவது ஸ்திரீ மூர்க்க பதிதனிடத்திலாவது கொடுக்கக்கூடாதென்று காணப்படுகிறது.

அதனாலேதான் நமது ரிஷிகள் தாயபாகவிஷயமாக ஔரஸபுத்ரர்கள் தாயபாகமாக அடையவேண்டியது என்ற பொதுவான விதியை ஏற்படுத்தி, அதற்கு அபவாதமாக சாஸ்திர தர்மத்தை அறிந்து,

क्लीबोऽथ पतितस्तज्जः पङ्गुरुन्मत्तको जडः ।
अन्धोऽचिकित्स्यरोगाद्या भर्तव्याः स्युर्निरंशकाः ॥

யாக்ஞவல்க்யம் VIII. 140.

நபும்ஸகனும், பதிதனும், பதிதனுக்குப் பிறந்தவனும், பாதமில்லாதவனும், பைத்யம் பிடித்தவனும், பகுத்தறிவு இல்லாதவனும், குருடனும், தீர்க்கப் படாதவியாதியுள்ளவனும், இவர்கள் முதலானவர்கள பாகம் பெற அர்ஹர்கள் அல்ல; ஆனால் சம்ரக்ஷிக்கப் படவேண்டியவர்களாம், என்று யாக்ஞவல்க்யர் கூறுகிறார்.

இவர்களைத்தவிர, கிரஹஸ்தாச்ரமத்தை விட்டவர்களுக்கும் அம்சமில்லையென்று வசிஷ்டர் அபிப்பிராயப்படுகிறார். நாரதர் பித்ருத்வேஷிக்கு பங்கில்லையென்றும், ஆகையால் க்ஷேத்ரஜனுக்கு எப்படி பங்கு கிடைக்க நியாயம்என்றும் சொல்லுகிறார். மனுவும் ஜாத்யந்தனுக்கும், செவிடனுக்கும் பங்கில்லை என்றார். பங்கு பிரியுங்காலத்தில் இந்த உபாதியிருப்பவர்களுக்கு பங்கு கிடையாது, உபாதி பின் நீங்கப்பெற்றால் பங்குண்டு என்று விக்ஞானேச்வரர் அபிப்ராயப்படுகிறார். இதில் ஸ்திரீகளும் நிரிந்திரியர்கள் என்றே கருதப்பட வேண்டும். அப்படியே ச்ருதியும் இருக்கிறது.

மேலே அநம்சகர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் யக்ஞகர்மாக்கள் செய்ய அநர்ஹாளானதாலும், பதிதர்கள் அவைகளை விட்டதாலும், அவர்களுக்கு பங்கில்லை என்று ஏற்கனவே கூறப்பட்டது.

இதற்கு மாறாக சிலர், ஸ்திரீகள் யுகாந்தரத்தில் உபநயன ஸம்ஸ்காரமும், வேதாத்யயன அதிகாரமும் பெற்றார்கள் என்று தெரியவருகிறபடியால், அவர்களுக்கும் பங்கு உண்டென்றும்' நிரிந்திரியர்களின் சந்ததிக்கு பங்கு உண்டென்று ஸ்மிருதி வசனமிருப்பதால், அவர்கள் உபநயன விவாஹாதிஸம்ஸ்காரங்களுக்கு யோக்யதை உள்ளவர்களாகவே கருதப்படுகிறார்கள், அனுஷ்டானத்திலும் ஸம்ஸ்காரங்கள் நடந்து வருகின்றதென்றும்

நியாயம் கூறி, எல்லாரும் யக்ஞத்தில் அதிகாரம் பெற்றவர்கள் எல்லாருக்கும் பங்கு உண்டு என்று சாதிக்கிறார்கள். நிரிந்திரியர்களுக்கு உபநயன ஸம்ஸ்காரங்கள் செய்துவைக்க சாஸ்திரம் இருப்பதாகக்காணோம். நபும்ஸகர்களுக்கு விவாஹம் கூடாதென்றே விதியிருக்கிறது. அவர்களுக்கு ஸ்திரீகளை விவாஹம் செய்வித்து அவமானத்துக்கும், கஷ்டத்துக்கும் உள்ளாக்குவது தர்மமாகுமா? கருணையாகுமா?

எப்போது க்ஷேத்ரஜன் புத்ரனாகமாட்டானோ; அப்போதே நபும்ஸகன் முதலான நிரிந்திரியர்களுக்கு புத்ரன் தன் ஸ்திரீயினிடத்தில் க்ஷேத்ரஜனுவான், ஆகையால் அவனுக்கு பங்கு கிடைக்க நியாயமில்லை.

பதிதனுக்கு பங்குஉண்டென்று ஏற்கனேவே சர்க்கார்சட்டம் செய்துவிட்டபடியால், அவனிலும் குறைந்தபாபமுடைய ஏனையோர்களுக்கு பங்கு கொடுக்கவேண்டியது நியாயமல்லவா என்று வாதிக்கப்படுகிறது. ஏற்கனவே ஒரு பிசகு ஏற்பட்ட நியாயத்தால், பின்னும் அதேமாதிரி பிசகுகள் செய்யவேண்டுமென்பது உண்டா. அந்தச்சட்டத்தையும் மாற்றவேண்டும்

பதிதர் அல்லாத நிரிந்திரியர்களும் பாபிகளே என்பது நமது சாஸ்திர ஸித்தாந்தம்

इह दुश्चरितैः केचित्केचित्पूर्वकृतैस्तथा ।
प्राप्नुवन्ति दुरात्मानो नरा रूपविपर्ययम् ॥ மனு XI 48.
एवं कर्मविशेषेण जायन्ते सद्विगर्हिताः ।
जडमूकान्धबधिरा विकृताकृतयस्तथा ॥ மனு XI. 52.

மனிதர்கள் ஜன்மாந்தரத்திலும், இந்த ஜன்மத்திலும் செய்த பாபத்தினுல், குரூபிகளாயும், அங்க ஹீனர்களாயும் பிறக்கிறார்கள். அவர்கள் ப்ராயச்சித்தம் செய்து கொள்ள சக்தி யுள்ள

வர்களாகில் செய்து பாபசுத்தி பெறலாம். அதனால்மாத்திரம் எல்லா வ்யவஹாரத்துக்கும் யோக்யதை உண்டாகமாட்டாது.

வைதிகவிதி இங்ஙனம் இருக்க, லௌகிக நியாயத்தையும் விசாரிப்போம். சொத்து தாங்களே தேடக்கூடிய சரீரமனோதிடமுள்ள சகோதரர்களை விட அவர்கள் சரியாய் அமையப்பெருதவர்களே அதிகமான சொத்து உதவியைப் பெறவேண்டியது நியாயம் என்று யுக்திவாதம் சொல்லப்படுகிறது. இதை ஒப்புவோமானால் அழகில்லாதவனுக்கு அழகுள்ள ஸ்திரீயும் பரீக்ஷை கொடுக்க ஸாமார்த்திய மில்லாதவனுக்கு மேலான உத்யோகச் சம்பளமும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடாதவனுக்கு காவல் பந்தோபஸ்த்தும், ஆஸ்தியை ஆளக்கூடாதவனுக்கு ஆஸ்தியும் கொடுக்கவேண்டியதே நியாயமாகும்ஆனால் லோகத்தார் அந்தநியாயத்தை ஒப்புக்கொள்ளவுமில்லை. அநுஷ்டானத்தில் நாம் காணவுமில்லை. அப்படியானால் உத்யோகஸ்தர் ஏராளமாய்ச் சம்பாதிக்கும் பொருளை யெல்லாம் தங்கள் சாப்பாட்டுச் செலவுபோக, மிச்சத்தை ஏழைகளுக்கு பங்கு வீதம் கொடுக்கலாமே. அப்படி சட்டமும் ஏற்படுத்தலாமே.

குருடனும், செவிடனும், காலில்லாதவனும், பைத்தியக்காரனும், தன்னைத்தானே, பிறர் உதவியின்றி சம்ரக்ஷிக்க இயலார்கள். ஆகையால், அவர்களுக்கு பங்கு வீதம் கொடுத்தாலும், அவர்கள் சகோதரர்களே அவர்களையும் காப்பாற்றி சொத்தையும் ரக்ஷிக்கவும் நேர்வது ஸகஜமேயாகும். ஏனையோர்கள், சக்தியற்ற அன்னோர்களை பாலத்காரமாகவோ, ஏமாற்றியோ, அவர்களிடம் இருக்கும் சொத்தைக்கவர்ந்து கொண்டு, நிர்கதியாய் விட்டு விடுவார்களன்றோ. அந்தக்காரணத்தைக்கொண்டுதான், பரமகாருண்யாளான நமது ரிஷிகள், அசக்தர்களையும் நிரிந்திரியர்களையும், அபலைகளான ஸ்திரீகளையும் பாகவுரிமையினின்றும் விலக்கி, அவர்களை பாக உரிமைக்காரர்கள் நன்றாய் அன்னவஸ்திரங் கொடுத்து, ஆயுள் பரியந்தம் ஸம்ரக்ஷிக்க கடமைப்பட்டவர்கள் என்று விதித்திருக்கிறார்கள். இந்த

லௌகிக நியாயத்தையும் தெரிந்து கொள்ளாமல், நம்மில் சிலர் அசக்தர்களிடம் அனுதாபம் காட்டிவருகிறார்கள். தற்காலத்து இந்த பாக விலக்கு சரியாகக்காணப்படவில்லை என்பதற்கு மசோதாக்காரர் யாதொரு சரியான காரணமும் சொல்லவில்லை.

ஆசாரங்கள் வேறு, மதம் வேறு; மதக்கொள்கைகளை மாற்றாமலே, ஆசாரஸம்பிரதாயங்களை மாற்றுவது மதவிரோதமாகாது என்று மசோதாக்காரர் அபிப்பிராயப் படுவாராயின் அதுவும் தவறு. ஏனென்றால் நமது தர்மத்துக்கு

वेदोऽखिलो धर्ममूलं .... । மனு II. 6.

வேதமே தர்மமூலம் என்று கூறியிருப்பதால், ஆசார ஸம்பிரதாயங்களும், வேதமூலத்தைக் கொண்டதாயும், அதன் கருத்தை நன்று விளக்கிய மனுஸ்மிருதி முதலான ஸ்மிருதி சாஸ்திரத்துக்கும் ஒத்ததாயிருக்கவேண்டும்.

ஸ்மிருதிகள் சில விஷயங்களில் பேதங்கள் காணப்படுவதால், தற்காலம் நாம் வேண்டியதை மாத்திரம் எடுத்துக் கொள்வோம், அல்லது வேறு ஸ்மிருதியை உண்டாக்குவோமென்றாலும், அதுவும் அஸங்கதம். ஏனென்றால் விதி விஷயங்களிலும், முக்ய ஆசாரங்களிலும் ஸ்மிருதிகள் அபிப்பிராயம் எல்லாம் ஒன்றே. இச்சையாய்ச் செய்யும் கர்மாக்களில் மார்க்காந்தரங்கள் உண்டு. அவைகளில் தான் சிலவேறுபாடுகள் இருக்கின்றன.

மேலும், ஸ்மிருதிகளில் சொல்லப்படாத தர்மங்களுக்கு சிஷ்டாசாரம் பிரமாணமாகும். அதற்கு மாறுபட்டால் அவை தர்மங்களாகமாட்டாது. சிஷ்டர்கள் லக்ஷணம் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் பரிஷத்தில் தர்மவிஷயம் விசாரித்துத் தீர்மானிக்கப் படவேண்டியதே யொழிய, பல

மதஸ்தர்களும் பல ஜாதியாரும் கூடியுள்ள சட்டசபையில் ஹிந்துக்கள் தர்மசாஸ்திரத்தை வேறுபடுத்தப்பார்ப்பது அதிகார யோக்யமில்லாததுமன்றி அநியாயமாகும் என்பதற்கு சந்தேகமில்லை. ஹிந்துக்களுக்கு குருக்களாகிய மதாசாரியர்கள் பலர் இருக்க, அவர்கள் சம்மதமில்லாமல், ஹிந்து ஜனங்களுடைய தர்மசாஸ்திரத்தைச் சட்டத்தால் மாற்ற முயல்வது தர்மமல்ல. பொதுஜன சம்மதம் மசோதாவின் கருத்துக்கு இசைந்ததாயிருக்கிறதாகத் தெரியவருகிறது என்று மசோதாக்காரர் சொல்லுகிறார். அவருக்கு அது எப்படி புலப்பட்டதோ நாம் அறியோம். நம்மில் அநேகபத்திரிகை மூலமாயும், பிரசங்கரூபமாயும் கூக்குரல் போடுவது வழக்கமில்லாதது பற்றி, மௌனமே சர்வ சம்மதம் என்று அவர் எண்ணுகிறார் போலும். ஆகையால் நாம் இந்த மசோதாவைக் கண்டித்து சட்டசபைக்குத்தெரிவிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

டி. வி. சாமிநாதய்யர்.

மறுஜன்ம விசாரம்.

விசாரமென்பது நமக்குப் பிரத்யக்ஷப் பிரமாணத்தாலறியவே முடியாது. மற்றும் அனுமானப் பிரமாணத்தாலும் முக்கியமாய் சப்தப்பிரமாணத்தாலுமே அறியத்தக்கது. அனுமாணப்பிரமாணமும் தனியாய்ப்பிரமாண கோடியிற் சேராது. மற்றும் சுருதிக்கு விரோதமில்லாமலிருப்பதுதான் ஏற்றுக்கொள்ளப்படும். ஆதல்பற்றி இங்கு சாஸ்திரத்திற்குக்கொஞ்சமேனும் விரோதம் கொள்ளாததாய்க் கவனிப்பாம். இங்கு மனிதன் இறக்கும்போது அவனது தேகத்திலிருந்து அவனது கட்டைவிரற் பிரமாணமுள்ள அதேமாதிரி ஓர் புருஷன் வெளியேறுகிறான், என்று சாஸ்திர சம்மதம் பாரதத்தில் ஸாவித்திரீ உபாக்கியானத்தில்

अथ सत्यवतः कायात्पाशबद्धं वशं गतम् ।
अंगुष्ठमात्रं पुरुषं निश्चकर्ष यमो बलात् ॥

பிறகு ஸத்யவானது சரீரத்திலிருந்தும் பாசத்தினுற்கட்டுப்பட்டு தனது ஸ்வாதீனத்தை யடைந்த கட்டைவிரற் பிரமாணமுள்ள புருஷனை யமன்பலத்தால் இழுத்தான் என்று சொல்லியிருக்கிறது. இவ்விஷயத்தில் மட்டிலும் சாஸ்திரம் சொல்கிறதென்பதை நம்பவேண்டுமென்பதல்ல. இதை அமேரிக்காவில் நமது சாஸ்திர ஆராய்ச்சி செய்யுமோர் கூட்டத்தார் ஏதோ ஒருவிதமாய் உண்டுபண்ணப்பட்ட மையைக் கண்களிற்தடவிக்கொண்டு சாகிற ஜந்துவின் பக்கத்திலுட்கார்ந்திருந்தால் சரீரத்தை விட்டு வெளியேறும் கட்டைவிரற் பிரமாண முள்ள ஜீவன் கண் மறையுமட்டும் பார்க்கும்படி யாகிறதென்றும் சொல்வதாய் முன் ஒருசமயம் ஸம்ஸ்கிருதசந்திரிகா என்ற பத்திரிகையில் வாசித்திருக்கிறேன். அத்தகையமையானது கொல்லப்படும் பசுவின் கண்களிலிருந்து உடனே எடுக்கப்படும் பதார்த்தத்தாற் செய்யப்படுகிறதென்றும் அப்பத்திரிகையின் கூற்று. ஆகவே நம்சரீரத்தினின்றும் ஜீவன் வெளியேறுகிறதென்ருயிற்று. இதனுல்

न स्वर्गो नापवर्गो वा नैवात्मा पारलौकिकः । என்றும்
यदि लोकान्तरं गच्छे ज्जीवो देहाविनिर्गतः ।
निवर्तेतां पुनस्तद्वत् बन्धुस्नेहसमाकुलः ॥

ஸ்வர்க்கமாவது மோக்ஷமாவது பாரலோகசாதனமான ஆத்மாவாவது கிடையாது. தேகத்தைவிட்டு வெளியேறும் ஜீவன் லோகாந்தரம் செல்வதுண்மையானுல் மறுபடியும் பந்து ஸ்நேகத்தால் திரும்பி வரட்டுமே என்றெல்லாம் கேட்டும் நாஸ்திகர்களுடைய வசனம் பிரமாணமற்றதாயிற்று. இனி இச்சீவன் தேகத்தைவிட்டு வெளியேறும்போது மூச்சுக்காற்று என்று வெளிப்படையாய்ச் சொல்லும் காற்று மட்டிலும் வெளியிற் சென்றுவிடுகிறதா அல்லது வேறேதாவது போகிறதாவென்ருல் உயிர் என்ற மூச்சுக்காற்றுமட்டிலும் வெளியேறுவதென்றல்ல.

(தொடரும்)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.